# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.41/2015

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆறுமுக முதலி | மதம் | : இந்து |
| த/பெ | : கைலாச முதலி | ஜாதி | : -- |
| வயது | : 75 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : நெசவு | வட்டம் | : திருத்தணி |

<u>04.03.2026</u>

<u>வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு 27 முதல் 30 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எங்கள் ஊரில் செங்குந்தர் முதலியார் குடும்பங்கள் சுமார் 400 குடும்பங்கள் உள்ளனர் என்றால் ஆமாம். அதில் A பிரிவு B பிரிவு என இரண்டு பிரிவுகள் உள்ளனர் என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்த நாங்கள் B பிரிவினர் என்றால் ஆமாம். பிரதிவாதிகள் A பிரிவினர் என்றால் ஆமாம். பி பிரிவில் உள்ள அனைவரும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் 7 நபர்கள் மட்டும்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றாலும் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யானது என்பதால்தான் பி பிரிவில் உள்ள மற்ற நபர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி ஆறுமுத்து முதலிக்கு சொந்தமானது என்றாலும் அதில் நாங்கள் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தது செல்லாது என்றால் அது 400 குடும்பங்களுக்கும் சொந்தமான சொத்தாகும். வழக்க சொத்தில் உரிமையோ, அனுபவமோ இல்லாமல் உறுத்துக்கட்டளை மட்டும் கேட்டிருப்பது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதி ஆறுமுத்து

முதலி வழக்கு சொத்தில் ஒருசில பகுதிகளை விற்றுள்ளார் என்றால் அதை நாங்கள் இரண்டு பிரிவினரும் சேர்ந்துதான் விற்றோம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2ல் 18.11.2009ல் ஆறுமுத்து சுப்பிரமணிக்கு விற்றுள்ளார் என்றால் ஆமாம். 2 பிரிவினரும் சேர்ந்துதான் விற்றோம்.

3. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2ல் 18.11.2009ல் ஆறுமுத்து தியாகராஜனுக்கு விற்றுள்ளார் என்றால் 2 பிரிவினரும் சேர்ந்து கையெழுத்து போட்டுதான் விற்றோம். பி.வா.சா.ஆ 2ல் ஆறுமுத்து முதலி விற்றதாக மட்டும்தான் விற்றதாக உள்ளது என்றால் அவரது தாத்தா பெயரில் பட்டா இருந்ததால் ஆறுமுத்து தன் பெயருக்கு மாற்றி கொண்டு அவர் கையெழுத்து போட்டு விற்றார். ஆறுமுத்துவின் தாத்தா பெயர் நாராயணசாமி முதலி என்றால் ஆமாம். நாராயணசாமி முதலியின் பெயரில்தான் பட்டா இருந்தது என்றால் ஆமாம். வழக்கு சொத்து செங்குந்தர் மக்களுக்கு சொந்தமானது என்பதை காட்ட பட்டா, சிட்டா உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் இல்லை. நாராயணசாமி பெயரில்தான் பட்டா இருந்தது.

4. வழக்கு சொத்தின் ஒரு பகுதியை வாங்கிய சுப்பிரமணி, மணி, தியாகராஜன், வெண்ணிலா, துர்வாசலு ஆகியோர் இந்த வழக்கில் தரப்பினராக இல்லை என்றால் ஆமாம். இருதரப்பினரும் சேர்ந்து விற்றோம். எனவே அவர்களை சேர்க்கவில்லை. இரண்டு தரப்பினரும் சேர்ந்து விற்றதாக சொல்லும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போதும் இரு தரப்பினரும் சேர்ந்து விற்றோம் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் ஆமாம். அரசு பள்ளிக்காக 2 ஏக்கர் நிலத்தை தானமாக இதே நிலத்தில் இருந்து எழுதி கொடுத்தார்கள் என்றால் ஆமாம். இருத்தரப்பினரும் சேர்ந்துதான் எழுதி கொடுத்தோம். அரசு பள்ளிக்காக 2 ஏக்கர் நிலத்தை தானமாக கொடுத்த விவரத்தையும் பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை.

5. 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல்

செய்துள்ள இந்த பொய் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்ற நபர்களையும் தானமாக பெற்ற பள்ளியையும் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)